**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
0413-2339099
e-mail : cm.pon@nic.in

No.1959/CM/Mssg/2018/40

Date : 07/08/2018

## இரங்கல் செய்தி

இந்தியாவின் மூத்த அரசியல் தலைவரும், தமிழகத்தின் முதலமைச்சராக ஐந்துமுறை பதவிவகித்தவரும், திராவிட இயக்கத்தின் முன்னோடியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான டாக்டர் கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள் 07.08.2018 அன்று காலமானார் என்ற செய்திகேட்டு மிகுந்த துயருற்றேன். திருவாரூர் மண்ணில் திருக்குவளை என்ற கிராமத்தில் பிறந்து, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக அரசியலில் ஆர்வம் கொண்டு பல போரட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம், கல்லக்குடி பெயர்மாற்றப் போராட்டம், என பல போராட்டங்களைத் தலைமை தாங்கி இளவயதிலேயே வெற்றிகரமாக நடத்தியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அரசியல் மட்டுமல்லாது கலை, இலக்கியம், கவிதை, பத்திரிக்கைத்துறை, திரைப்படத்துறை, சமூக நீதி, பொதுவுடமை, போன்றவற்றிலும் சிறந்துவிளங்கியவர், பன்முகத்தன்மை கொண்டவர்.

தமிழ் மற்றும் தமிழர்கள் மீது ஆழ்ந்த பற்று கொண்டவர். தமிழுக்கு அளப்பறிய தொண்டாற்றி முத்தமிழ் அறிஞர் என்று புகழப்பட்டவர். உலகில் இருக்கும் அனைத்து தமிழர்களுக்கும் பாதுகாவலராக இருந்தவர். அதன் காரணமாக உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

....2/-

தாலிக்குத் தங்கம், சமத்துவபுரம், பிற்படுத்தப்பட்டோர்க்கு 69% இடஒதுக்கீடு, காவல்துறை சீர்திருத்தம், உழவர்சந்தை போன்ற சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்கான நலத்திட்டங்களை உருவாக்கி கிராம மற்றும் நகரப்பகுதிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தியவர். அகில இந்திய அரசியலிலும் ஈடுபட்டு, பல பிரதமர்களை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. அதன்மூலம் இந்தியாவே உற்றுநோக்கிய அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அன்னை இந்திரா, தலைவர் ராஜிவ்காந்தி, அன்னை சோனியாகாந்தி, தலைவர் ராகுல்காந்தி போன்ற தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர், பாராட்டப்பட்டவர். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியில் அமைந்தபோது, அதன் வழிகாட்டியாக விளங்கி, இந்தியாவின் வளர்ச்சிக்கு அடிகோலியவர்.

அவருடைய இழப்பு தமிழகத்திற்கு மட்டுமின்றி புதுச்சேரி உள்ளிட்ட அகில இந்தியாவிற்கும், உலகத்தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். டாக்டர் கலைஞர் அவர்களை இழந்து வாடும் திரு ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

வேநாராயணசாமி

(வே. நாராயணசாமி)